**மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்தஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, நிதியத்தின் நிதிக்கூற்றுகளின் ஊடாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல், அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சுயவருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளர் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை வெளியிடும் கருத்தில் அல்லாத போதும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக விளக்கமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக்
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,
- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5. நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| | குறித்த நியமத்துடன் தொடர்பான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07** | | |
| (i) | பந்தி 31 பிரகாரம் காலப்பகுதிக்குரிய ரூபா 1,157,299,900 ஆன வட்டி வருமானம் மற்றும் ரூபா 1,307,590,803 ஆன பணமாகக் கிடைத்த வட்டி காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் அவ்வாறு காட்டியிருக்கவில்லை. | காலப்பகுதிக்குரிய பணமாகக் கிடைத்த வட்டிப் பணத்தை காசப்பாய்ச்சல் கூற்றில் குறித்த கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கபடும். | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நம்பிக்கை பொறப்பு நிதியத்திற்கு உரித்தான கிரயம் ரூபா 772,000 ஆன சொத்துக்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள், வர்த்தக அமைச்சிற்கு கிரயப் பெறுமதிக்கு பரிமாற்றம் செய்திருந்த போதும், காசுப்பாய்ச்சல் கூற்றில் சொத்துக்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனை இலாபமாக ரூபா 772,000 ஆன பெறுமதியொன்று காட்டப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08**

| | | |
|---|---|---|
| பந்தி 49 பிரகாரம் நிறுவனத்தால் முன்னைய ஆண்டிற்குரியதாக செம்மையாக்கல் செய்யும் போது அதற்குரிய செம்மையாக்கல் தொடர்பாக அவற்றின் தன்மை மற்றும் அளவுகளை நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்த வேண்டிய போதும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தால் செம்மையாக்கிய கூட்டுத் தொகை ரூபா 157,863,504 ஆன முன்னைய காலப்பகுதிக்குரிய செம்மையாக்கல்களை, நிதிக்கூற்றுக்ளில் வெளிப்படுத்தி இருக்காததுடன் செம்மையாக்கிய கூட்டுத்தொகை தொடர்பான அட்டவணையேனும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | இதனை நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 40**

| | | |
|---|---|---|
| பந்தி 06 பிரகாரம் முதலீட்டு வருமானத்தை நிகழ்கால பெறுமதியில் மதிப்பிட்டு காட்டப்பட வேண்டிய போதும் 2005 ஆண்டில் ரூபா 12,460,179 ஆக கணக்கீடு செய்திருந்த நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்தான மாளம்பேயில் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியை மீளாய்வாண்டு வரையும் நிகழ்கால பெறுமதியில் மதிப்பிட்டு பதிவேடுகளிற்கு எடுத்திருக்கவில்லை. | SLIIT நிறுவன கட்டுப்பாட்டு சபை சொத்துக்களுக்காக மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக் கொள்ள வசதிகளை வழங்காததன் மீது மீளாய்வாண்டில் சொத்துக்களை நிகழ்கால பெறுதிக்கு கணக்குளில் செம்மையாக்க முடியாதுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வ அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜனாதிபதி நிதியத்திலிருந்து கிடைத்த உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 திகதியன்று அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து கிடைக்க வேண்டிய இலாபப் பங்கு ரூபா 1,263,928,947 ஆனபோதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,230,000,000 ஆக, ரூபா 33,928,947 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | அபிவிருத்தி லொத்தர் சபையின் மொத்த இலாபத்தினுள் தேறிய லொத்தர் வருமானம் மற்றும் பெற்றுக் கொள்ளாத பரிசு தொகையும் உள்ளடங்குகின்றன. அவ்விலாபத் தொகையும் பரிசு தொகையும் ஜனாதிபதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் அதன் 50% ஆன பகுதி மஹபொல நிதியத்திற்கு செலவு வவக்கப்படுவதில்லை. அதன் பிரகாரம் அபிவிருத்தி லொத்தர் சபையின் வருமான அறிக்கை பிரகாரம் உள்ள மொத்த இலாபத்திலிருந்து 50% ஆன பங்கு மஹபொல திதியத்திற்கு கிடைப்பதில்லை. அதன் பிரகாரம் காட்டியுள்ள வித்தியாசம் பெற்றுக் கொள்ளாத பரிசுத் தொகைகளின் பங்குகளாகும். | சரியான இலாப பங்கை உறுதி செய்து கணக்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் முழு உரிமையுடன் கூடிய இரண்டு துணை கம்பனிகளான நெஷனல் வெல்த் கோபரேஷன் மற்றும் நெட்வெல்த் சிகியுரிடீஸ் ஆகிய கம்பனிகளுடன் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2013 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | இது தொடர்பாக கோப் குழுவில் கலந்துரையாடியதுடன் 2019 ஆண்டு முதல் ஒன்றிணைந்த கணக்குகளை தயாரித்து சமர்பபிக்குமாறு அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒன்றிணைந்த கணக்குகளை தயாரிக்க கணக்காய்வு நிறுவனமொன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2019 ஆண்டிலிருந்து இந்த 2 நிறுவனங்களையும் கலைக்க தீர்மானித்திருந்ததால் மஹபொல நிதிய கணக்கு மற்றும் அவ் 2 நிறுவனங்களின் கணக்கு வெவ்வேறாக கணக்காய்விற்கு சமர்ப்பித்து இறுதி ஆண்டறிக்கையும் 2020 ஆண்டு வரை தொடர்ந்து பாறாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | கோப் குழுவின் பரிந்துரைப்படி ஒன்றிணைந்த கணக்குகள் தயாரித்து கணக்காய்விற்கு சமரப்பிக்க வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று திறைசேரி பிணைமுறிக்காக ரூபா 219,431,931 ஆன கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கிடைக்க வேண்டிய வருமானங்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | துணை கம்பனிகளிலிருந்து சுவீகரித்த அலுவலக உபகரணங்களின் ஒரு பகுதி வர்த்தக அமைச்சிற்கு ஒப்படைத்ததற்காக நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,021,450 இனை நிதிக்கூற்றுக்களில் ரூபா 772,000 ஆக, ரூபா 249,450 குறைத்து ஏனைய பெறவேண்டியவையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கிடைக்க வேண்டிய பணம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மிஹின்தளே நகர கருத்திட்டத்தின் வீடியோ அறிக்கைக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்திய ரூபா 870,000 பிரயாண செலவு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் மிஹின்தளே நகர கருத்திட்டத்திற்குரிய செலவு ரூபா 870,000 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 திகதியன்று பேரேட்டுக் கணக்கு மீதி மற்றும் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மோடார் வாகன மீதி மற்றும் தேய்மான ஏற்பாட்டுக் கணக்கு மீதிக்கிடையில் ரூபா 5,100,000 வீதமான வித்தியாசமொன்று காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | வித்தியாசத்திற்கான சரியான பெறுமதிகளை இனங்காண வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய நிதி

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுறவு மொத்தவிற்பனை கூட்டுத்தாபன (கூ.மொ.கூ) கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பயன்படுத்துவதன் காரணமாக, நிதியத்தினால் கூ.மொ.கூ இற்கு வழங்கிய ரூபா 348,810 ஆன மீள்செலுத்தும் வாடகை வைப்புமொன்று, அக் கட்டிடத்திலிருந்து அகன்று 05 ஆண்டுகள் கழிந்த பின்னரும் மீள்அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 348,810 வை மீண்டும் அறவிட அடிக்கடி கடிதம் மற்றும் அதற்குரிய வங்கிக் கூற்று அனுப்பி அது தொடர்பாக செயற்பட்ட போதும் இன்னும் பணத்தை எங்களுக்கு பெற்றுத்தர கூட்டுறவு மொத்தவிற்பனை கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்கவில்லை. | கிடைக்க வேண்டிய நிதியை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய நிதி

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சில பாடசாலைகளில் மேற்கொண்ட நிர்மாண நடவடிக்கைகளுக்காக நிறுத்தி வைத்த ரூபா 3,832,875 ஆன தொகையொன்று 2013 ஆண்டு முதல் இது வரை 08 ஆண்டுகளாக மாற்றமின்றி நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிலும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இத் தொகையை தீர்ப்பதற்குரிய பட்டியல்கள் மற்றும் அதற்குரிய வேலைகள் பூர்த்தி செய்ததற்கான அறிக்கை ஒப்பந்ததாரர்களால் இது வரை சமர்ப்பிக்கவில்லை. அதன் பிரகாரம் பெறகைகள் செயன்முறையில் குறைபாடு மற்றும் கடன்படுனர்களின் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாததால் கொடுப்பனவு செய்ய முடியாதுள்ளது. | செலுத்த வேண்டிய நிதியை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 1,292,729,814 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,085,347,967 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 207,381,847 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வளர்ச்சிற்கு, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 338,463,816 இனால் (24 சதவீதத்தால்) நேரடி செலவுகள் குறைந்தமை முக்கிய காரணமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | 2022 ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொனறு தயாரிக்கப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கை திட்டத்தை வருடாந்தம் தயாரிக்க வேண்டும். |

### 3.2 இனங்கண்ட நட்டம்

| கணக்காய்வ அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 செப்டம்பர் 21 திகதி முதல் 2022 செப்டம்பர் 20 திகதி வரையான 60 மாதகால ஒப்பந்த காலத்திற்குரிய செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் மாதாந்தம் ரூபா 132,500 ஆன பெறுமதி சேர்க்கப்படாத விலைக்கு மாதத்தினுள் 3000 கிலோ மீட்டர்கள் செலுத்தும் அடிப்படையில் நிதியத்தினால் தனியார் நிறுவனமொன்றிலிருந்து வேன் வண்டியொன்றை பெற்றிருந்தது. எவ்வாறாயினும் குறித்த வேன் வண்டியை பெற்றுக் கொண்டு 51 மாதங்கள் கடந்திருந்துடன் அக்காலப் பகுதிக்குள் செலவிட்ட பணத்திற்கு மாதத்திற்கு 3000 கிலோ மீட்டர் வீதம் 153,000 கிலோ மீட்டர்கள் செலுத்த முடியுமாக இருக்கையில், 116,456 கிலோ மீட்டர்கள் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததால் தேவைப்பாட்டை சரியாக இனங்காணாது பெற்றுக் கொண்ட அவ்வேன் வண்டி, குறைந்த ஓட்ட அளவையேனும் பூர்த்தி செய்யாது, 36,544 கிலோ மீட்டர்கள் குறைவாக செலுத்தப்பட்ட காரணத்தால் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 2,381,762 ஆன நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | கொவிட் - 19 தொற்று காரணமாக தற்காலிகமாக அலுவலகம் மூடப்பட்டிருந்த காரணத்தால் 2½ வருடங்ளாக செலுத்தப்படவில்லை. அவ்வாறு மோடார் வண்டியை செலுத்தாததால் சராசரியாக ரூபா 4 இலட்சங்கள் அளவான எரிபொருள் கிரயமொன்று நிதியத்திற்கு சேமிப்பாகவுள்ளது. | வாகனங்களின் தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டதன் பின்னர் மாத்திரமே குத்தகை ஒப்பந்தத்திற்கு உட்பட வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வ அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஜனவரி 08 திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் செயற்குழுவினால் வழங்கிய பின்வரும் பரிந்துரைகளை இதுவரை செயற்படுத்தியிருக்கவில்லை.<br>(i) நிதியத்தின் நம்பிக்கை பொறுப்புச் சபைக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதும் தவிசாளர் ஒருவரை நியமிப்பதற்கு அமைச்சிடம் கோரிக்கை விடுத்த போதும், இதுவரை நியமிக்கப்படவில்லை. | நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பின்வரும் திருத்திய வர்த்தமானி 2022 ஜனவரி 14 திகதி வெளியிடப்பட்டதுடன் தவிசாளர் நியமிப்பது தொடர்பான குறித்த கோரிக்கை தற்போது வர்த்தக அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் நிலைமையின் கீழ் ஓரளவு தாமதித்துள்ளது. | கோப் குழு பரிந்துரைகளை விரைவில் செயற்படுத்த அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) அபிவிருத்தி லொத்தர் சபையின் இலாபத்தில் 50 சதவீத பங்கொன்று நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு கிடைக்கும் வகையில் அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தை திருத்திக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. | இது தொடர்பாக கலந்துரையாடி வரைபை தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்ததுடன் அதற்காக வர்த்தக அமைசசரின் மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் அங்கீகாரம் இதுவரை வழங்கப்படவில்லை. | கோப் குழு பரிந்துரைகளை விரைவில் செயற்படுத்த அமைச்சுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) மங்காத்தா லொத்தர் தொடர்பாக இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக உள்ளக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியிருந்த போதும் அவ்விசாரணை இது வரை முடிக்கப்படவில்லை. | இது தொடர்பாக லொத்தர்தாரரினால் ஒப்பந்த பிரகாரம் செலுத்த வேண்டிய ரூபா 750 மில்லியன் மற்றும் அதற்குரிய சட்டரீதியான வட்டியை அறவிட ஆழைப்பாணை (letter of demand) அனுப்பப்பட்டுள்ளதுடன் லொத்தர்தாரரினால் ஒப்பந்த பிரகாரம் தீர்ப்பனவிற்காக தீர்ப்புச் சபையொன்றை நியமித்து, மஹபொல நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 750 மில்லிய மற்றும் அதன் மீதான சட்டரீதியான வட்டியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வ அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மஹபொல அலுவலக கட்டிடத் தொகுதிக்காக மேலதிக இடமொன்றை பெற்றுக் கொள்ள ரூபா 500,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், அதன் அறிவித்தல் விளம்பரத்திற்காக மாத்திரம் மீளாய்வாண்டினுள் ரூபா 859,305 ஆன செலவொன்று செய்யப்பட்டிருந்ததுடன், விளம்பரத்திற்காக ரூபா 300,000 ஏற்பாடு செய்திருக்கையில் விளம்பர நடவடிக்கை மற்றும் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்க ரூபா 804,978 செலவிடப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பெறுகைகள் திட்டத்தை சரியாக தயாரிக்க வேண்டியதுடன் அதனை பயனுள்ள கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்த வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வ அவதானங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அங்கீகார ஆளணி 31 ஆன போதும் 2021 திசெம்பர் 31 திகதியன்று உள்ளவாறான ஆளணி 13 ஆனதில் 18 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்கள் 06 உயர்நிலை பதவிகளுடனும் 06 இரண்டாம் நிலை பதவிகளுடனும் 06 ஆரம்ப நிலை பதவிகளுடனும் உள்ளடங்கியிருந்தன. மீளாய்வாண்டளவிலும் அவ்வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் 2022 ஏப்ரல் அளவில் 06 உயர்நிலை வெற்றிடங்களில் 02 பூர்த்திசெய்திருந்தன. | நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அங்கீகார ஆளணி 31 ஆன போதும் நிதியத்திற்கு காணப்படும் இடவசதிகள் மற்றும் தேவைப்பாட்டை கருத்திற் கொண்டு குறித்த ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் அரச சுற்றறிக்கை பிரகாரம் ஆடசேர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவது நடைமுறை சாத்தியமற்றது. இரண்டாம் நிலை 04 வெற்றிட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரத்தை நம்பிக்கை பொறுப்பு நிதியம் வழங்கியுள்ளதுடன் அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. மேலும், தற்போது காணப்படும் வெற்றிடங்களை காப்புச் செய்ய இரண்டாம் நிலை பதவிகளுக்கு உதவுவதற்காக தொழிற் பயிற்சி நிறுவனங்களால் பயிற்சியாளர்களை ஆடசேர்ப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. | நிதியத்தின் தேவைப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்ள தேவையான குறைந்தபட்ச ஆளணியையேனும் ஆடசேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |